## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

## ‘வாயு மாசடைதலின்றி எமது உலகமொன்று’

# நாடளாவிய பாடசாலைகள்/ திறந்த சுவரொட்டி போட்டி

வாயு மாசடைதல் காரணமாக பல்வகை சுகாதார, சுற்றாடல் தாக்கங்கள் உண்டாவதனால் வாயு மாசடைதல் ஏற்படும் வீதம் மற்றும் அதனை ஆகக் குறைந்ததாக்குவதற்கு எடுக்கக் கூடிய நடைமுறைகள் பற்றி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களை அறிவுறுத்துவதற்காக “வாயு மாசடைதலின்றி எமது உலகமொன்று” எனும் தலைப்பில் நாடளாவிய ரீதியில் பாடசாலைகள்/ திறந்த சுவரொட்டி போட்டியொன்று கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்தப்படும். இங்கு வெற்றியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் 2019 தேசிய சுற்றாடல் தின விழாவில் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக கீழுள்ளவாறு பாடசாலைப் பிரிவில் இருந்து 03 போட்டித் தொகுதிகளின் கீழும் திறந்த பிரிவில் இருந்து நிர்மாணிப்புகள் சமர்ப்பிப்பதற்கு அவகாசமளிக்கப்பட்டுள்ளது.

போட்டித் தொகுதிகள்:

1. பாடசாலைப் போட்டி
    - 6 - 9 தரம்
    - 10 - 11 தரம்
    - 12 - 13 தரம்
2. திறந்த போட்டி

சுவரொட்டிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதம்:

- கடதாசியின் அளவு அங்குலம் : 14 x 18
- கடதாசியின் வகை : பிரிஸ்டல் போர்ட்/ ஆர்ட் போர்ட்
- வர்ண ஊடகம் : நீர் சாயம்/ பெஸ்டல்/ அக்ரிலிக்/ போஸ்டர் சாயம்
- சுவரொட்டிகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 2019 ஏப்ரல் - 05

அனைத்து தொகுதிகளிலும் வெற்றியாளர்களுக்கு கீழ்க் கண்டவாறு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- 1ஆம் பரிசு - ரூபா 20,000.00
- 2ஆம் பரிசு - ரூபா 15,000.00
- 3ஆம் பரிசு - ரூபா 10,000.00
- விசேட திறமை பரிசு 7 ஆட்களுக்கு - ரூபா 5,000.00
- இதற்கு மேலதிகமாக அனைத்து போட்டி தொகுதிகளிலும் 40 பேர்களுக்கு திறமைச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

**போட்டி நிபந்தனைகள்:**

1. மேலே தரப்பட்டுள்ள தலைப்பின் கீழ் எந்தவொரு வாக்கியமும் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய ஒரு மொழி மட்டும் உரித்துடையதாக சுவரொட்டியில் சேர்த்துக் கொள்ள முடியும்.
2. சுவரொட்டியின் பின் பக்கத்தில் போட்டித் தொகுதி, நிர்மாணிப்பாளரின் பெயர், பாடசாலை (பாடசாலை மாணவர்களுக்காக) முகவரி, தொலைபேசி இலக்கம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
3. பாடசாலை மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் சுவரொட்டிகள் உரித்துடைய பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
4. திறந்த தொகுதியின் கீழ் சுவரொட்டி சுய நிர்மாணிப்பொன்றாகும் என தம்மாலேயே உறுதிப்படுத்தப்பட்டு அடையாள அட்டை இலக்கத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. இறுதித் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் சுவரொட்டிகள் போட்டிக்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் சுவரொட்டிகள் தேர்ச்சி பெற்ற நடுவர் குழுவொன்றின் மூலம் தெரிவு செய்யப்படும் என்பதுடன் நடுவர் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். போட்டிக்காக தமது நிர்மாணிப்புகள் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் மேலே தரப்பட்டுள்ள நியமக் குறியீடுகளுக்கு அமைவாக சுவரொட்டிகளை நிர்மாணித்து பணிப்பாளர், வாயு வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓஸோன் அலகு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, “சொபாதம் பியஸ” இலக்கம் 416/சீ/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2019 ஏப்ரல் 05ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது கையில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**செயலாளர்,**

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,**

**“சொபாதம் பியஸ”, இலக்கம் 416/சீ/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல.**

**தொலைபேசி இலக்கம்: 011-2034221-22**